**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**முன்னிலை: திருமதி.R.D.குருலட்சுமி M.A.,M.L., PGDI & CL.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**
**2023ம் ஆண்டு ஜூன் மாதம் 12 -ம் நாள் திங்கட்கிழமை**
**(திருவள்ளுவர் ஆண்டு, 2054, சோபகிருது வருடம், வைகாசி மாதம் 29 ம் நாள்)**
**இ.ம.எண். 3/2023 இன் மு.வ.எண். 11/2022**

1. சுகுனா
2. கருணாகரசேதுபதி
3. அழகுவேல்
4. சிவப்பிரியா ... மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

-எதிர்-

1. மாணிக்கசெல்வம் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பு 27.04.2023 அன்று இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.என்.ஆர்.சரஸ்வதி, திரு.கே.சண்முகசுந்தரம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில வழக்கறிஞர் திரு.கே.ஸ்ரீகுரு, திரு.எஸ்.வீரபாண்டியன், திரு. எஸ்.சத்தியேந்திரன் ஆகியோர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், இருதரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

தாவா சொத்தை வருவாய் ஆவணங்களுடனும் கிராம நிர்வாக அலுவலர், வட்ட சார்அளவர் அல்லது குறுவட்ட சார்அளவர் உதவியுடன் பார்வையிட்டு வரைபடம் மூலம் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய ஏதுவாய் நீதிமன்ற ஆணையாளரை நியமனம் செய்து உத்திரவிட வேண்டி மனு தாக்கல்.

**1) மனு அபிடவிட் சுருக்கம்:**

தாவாசொத்தை வாதிகள் தாங்கள் பயன்படுத்தி வரும் 15 அடி பாதையை பிரதிவாதிகளான மனுதாரர்கள் எவ்வித இடைஞ்சலும் செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. புலஎண் 61/2எ2சி -ல் உள்ள 67 செண்ட் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தென்னந்தோப்பு ஆகும். அதில் 25 செண்ட் நிலத்தை 25.01.2017ம் தேதி வாதிகளுக்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்கு நடந்து செல்ல மட்டுமே பாதை உள்ளது. அதில் 15 அடி பாதை எதுவும் இல்லை. மீதியுள்ள 42 செண்ட் இடத்தில் 150 க்கும் மேலான தென்னைமரங்கள் வைத்து பிரதிவாதிகள் கைவசம் வைத்துள்ளார்கள். வாதிகள் தென்னைமரங்களின் வருவாயை கெடுக்கும் நோக்கில், உடைந்த செங்கல், பாராங்கற்களை தென்னந்தோப்பில் கொட்டி பாதையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். வாதியின் மகள் கிராம நிர்வாக அதிகாரியாக உள்ளதாலும், மருமகன் வழக்கறிஞராக உள்ளதாலும், தங்கள் செல்வாக்கை பயன்படுத்தி மனுதாரர்களின் சொத்தை அளவீடு செய்ய விடாமல் இடைஞ்சல் செய்து வருகிறார்கள். எனவே உண்மைதன்மையை நிரூபிக்க வருவாய் ஆவணங்களின் படி, தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர், பார்வையிட்டு அறிக்கை வரைபடம் தாக்கல் செய்ய உத்தரவிட கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாராகள் தரப்பில் மறுப்புரையின் சுருக்கம்:**

அ) மனு ஆட்சேபிக்கப்படுகிறது. மனுதாரர்கள் கொடுத்த கிரைய ஆவணத்தில் "சொத்திற்கு கீழ்புரம் தென்வடலாக 15 அடி அகலத்தில் வந்து கிழமேலாக செல்லும் பாதை வழியாக தாங்கள் இதில் கண்ட சொத்திற்கு வழக்கப்பபடி நடந்து புழங்கிக் கொள்ள வேண்டியது." என வாசகங்கள் உள்ளதை மறைத்து மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுப்பாதை விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் நீதிமன்ற ஆணையர் பரிகாரம் தேவையற்றது. பூமியில் இல்லாத பாதையை உருவாக்க முயற்சிப்பதாக கூறுவது சட்டத்திற்கு புறம்பானது. மனுதாரர்கள் கிரைய

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2023.06.12 15:17:21 +0530

ஆவணத்தில் உள்ளவாறு பாதையை அளந்து கொடுக்க தயாராக உள்ளதாக ஒத்துக் கொண்டுள்ள நிலையில் நீதிமன்ற ஆணையர் நியமனம் அவசியமில்லை. புல எண்.61/6 ன் நடுவே தூர்ந்து போன ஊற்றுக் கால்வாயை பாதையாக மனுதாரர்கள் பயன்படுத்தச் சொன்னதை எதிர்மனுதாரர் மறுத்து விட்டார்.

ஆ) 1ம் பிரதிவாதியின் கணவரான அன்புச் செல்வன் மற்றும் மாமனார் சிவகுருநாதன் ஆகியோரது பெயரில் உள்ள கிரைய ஆவணங்களின்படி பாதையை மறைத்து தாவாசொத்தை அளக்கு முயற்சி எடுத்ததை அறிந்து எதிர்மனுதாரர் முறையிட்டதால் நில அளவையர் சொத்தை அளக்கவில்லை. கிரைய ஆவணத்தில் உள்ள பொதுப் பாதையையும் சேர்த்து அளந்து அத்துமால் செய்வதில் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை.

**3)** இம்மனுவில் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

**4)** அசல் வழக்கானது பாதை விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தாவா சொத்தில் பாதை ஏற்படுத்த முயற்சி செய்வதாக மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்தரப்பில் கிரைய ஆவணத்தில் கண்டுள்ள பாதையை அளந்து அத்துமால் செய்வதில் ஆட்சேபனை இல்லை என கூறப்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் பார்வையிடும் போது, வீண் வாய்மொழி சாட்சியங்கள் குறையக் கூடும் என்ற மனுதாரர் தரப்பு வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

இறுதியாக, வழக்கறிஞர் **திரு.M.ராஜ்பரத்** அவர்கள் நீதிமன்ற ஆணையாளராக நியமிக்கப்படுகிறார். அவருக்கு ஊதியமாக ரூ.3500/-ஐ (ரூபாய் மூவாயிரத்து ஐநூறு மட்டும்) மனுதாரர்/வாதி இன்றிலிருந்து 10 நாட்களுக்குள் நேரடியாக செலுத்த வேண்டும். நீதிமன்ற ஆணையர் உபய தரப்பிலும் அறிவிப்பு கொடுத்த பிறகு, தாவா சொத்தின் அமைப்பு குறித்தும், அளவுகள் குறித்து உபயதரப்பினரின் ஆவணங்களின் அடிப்படையிலும், 25.01.2017ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும் அளந்து கிராம நிர்வாக அலுவலர் மற்றும் தகுதி வாய்ந்த நில அளவையர் உதவியுடன் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. அழைக்க. 05.07.2023

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தர்-தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2023.06.12 15:17:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை-
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை

R D GURULAKSHMI Digitally signed by R D GURULAKSHMI Date: 2023.06.12 15:17:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.